# மின்சார விநியோகம் உள்ளடங்கலாக ஊரக மின் இணைப்பு

**(இனம் - 14)**

ஊரக மின்மயமாக்கம் என்பது i) எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்குதல் ii) நீரிறைக்கும் விசையேற்றத்திற்கு மின் ஊட்டுதல் iii) தெரு விளக்குகள் அமைத்தல் iv) சிறு திருட்டுகளைத் தடுப்பதுடன், மின்சக்தியைப் பேணுதல் ஆகியன அடங்கும். 31.03.1995 அன்று, எல்லா நகரங்கள் (439) குடியிருப்பு உள்ள எல்லா ஊர்களுக்கு (15822) 99.897 விழுக்காடு அளவு சிற்றூர்களும் (47845 இல் 47794 ஊர்களுக்கு) மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் பல மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடு முதன்மை வகிப்பதுடன் அகில இந்திய சராசரியிலும் முன்னிலை வகிக்கிறது. (85% அளவு மின்சக்தி அளிக்கப்பட்டுள்ளது) ஆதி திராவிடர் குடியிருப்புகள் அனைத்திற்கும் (26713) மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 10.92 இலட்சம் குடிசை வீடுகள் மின்வசதியைப் பெற்றுள்ளது. வேளாண்மைக்கான நீரிறைக்கும் 14.88 இலட்சம் விசையேற்றங்களுக்கு மின்ஊட்டம் பெற்றுள்ளன. 1.4.95 அன்று நீரிறைக்கும் விசைக்குழாய்களுக்கு மின்ஊட்டம் அளிப்பதற்காக 467561 விண்ணப்பங்கள் தமிழ்நாடு மின்வாரியத்திட்ம் நிலுவையாக உள்ளன. அதிகமான பின் நிலுவைக்குக் காரணம், குறைந்த மின்சக்தி அளவினாலாகும். தமிழ்நாடு மின்வாரியம் ஆண்டுக்குச் சற்றொப்ப 40,000 நீர் இறைக்கும் விசைக் குழாய்களுக்கு மின் இணைப்பு அளிக்கிறது.

02. (1.4.95 அன்று உள்ளவாறு) 1166157 தெரு விளக்குகளுள் 910730 (1.4.96 அன்று உள்ளவாறு) விளக்குகளை ஊராட்சிகள் பெற்றுள்ளது. 832557 குழல் விளக்குகள், 36545 குமிழ் விளக்குகள், 4197 சோடிய (ஆவி)ம் விளக்குகள் மற்றும் 2926 மெர்குரி (ஆவி) விளக்குகள் உள்ளன. மின்சாரத்தைக் சேமிப்பதற்காக அரசு குமிழ் விளக்குகள் அனைத்தையும் சூழல் விளக்குகளாக மாற்ற முடிவு செய்துள்ளது. தலைக்கு ரூ. 20 /- க்கும் குறைவான வருவாயை உடைய 7047 ஊராட்சிகள் நிதி பற்றாக்குறை (ரூ. 10/- க்கும் குறைவான வருவாயை உடையவனாக 3452 ஊராட்சிகளும் ரூ. 20/- க்கும் குறைவான வருவாயை உடையனவாக 3590 ஊராட்சிகள்) ஊரக வளர்ச்சித்துறை இயக்குநரால் குறிப்பிடப்பெற்றன. இத்தகைய நிதிப் பற்றாக் குறையுடைய ஊராட்சிகளில் 341426 தெரு விளக்குகள் உள்ளன.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் படி, சாலைகளுக்கும் கட்டிடங்கள் உள்ள பகுதியிலமைந்த பொது இடங்களுக்கும் மின் விளக்குகள் அமைப்பது ஊராட்சிகளின் கடமையாகும். இவ்வாறாக ஊராட்சிகள் தமது சொந்த நிதியிலிருந்து தெரு விளக்குகளைப் பராமரிப்பதற்கான செலவினங்களை ஏற்க வேண்டுமென எதிர்ப்பார்க்கப் படுகிறது. தெரு விளக்குகளுக்கான மின் நுகர்வு கட்டணச் செல்வுகளை மேற்கொள்வதற்கும் வருவாய் குறைந்த ஊராட்சிகளுக்கு என மாநில அரசு ஒவ்வொரு ஆண்டும் தெரு விளக்கு மானியங்களை அளிக்கிறது. 1996 – 97க்கான வரவு செலவு திட்டத்தில் இத்தகைய மானியத்திற்காக 3 கோடி ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பெற்றுள்ளது

03. 1970 – 71 ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஊரக மின்வசதிக் கழகம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு நிதியுதவி அளிக்கிறது. (ஊர ஆதி திராவிடர் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு மின்சாரம் வழங்குதல், நீரிறைக்கும் விசையேற்றங்களுக்கு மின்ஊட்டுதல போன்றவற்றிற்காக) 31.3.95 வரை 412.02 கோடி ரூபாய்களை ஊரக மின்வசதிக் கழகமும் 324.40 கோடி ரூபாயகளை வங்கிகளுக்கும 2083 ஊரக மின்வசதித் திட்டங்களுக்காக கடனாக நிதியுதவி அளித்துள்ளன

04. நெடுந்தொாலைவிலுள்ள ஊர்கள வரையும பல்வேறு வகையான பயன்பாடுகளுக்காக மின்சாரம் பகிர்மானம் வழங்க தமிழ்நாடு பரந்த தொலைவலைப் பணியைக் கொண்டுள்ளது. மின்சக்தி சிறு திருட்டுக்கள் பரந்த அளவில் செய்யப்படும் தொழிலாகி விட்டது. அவை அடிப்படையிலேயே தமிழ்நாடு மின் வாரியப் பணியாளர்களால் கண்டறியப்பட்டும் வருகின்றன. உள்ளூர் குற்றவாளிகளைப் பிடிக்கும் நோக்கம் எதுவுமின்றி இவ்வாறான சில திருட்டுகளைக் கண்டு பிடிக்கும் பணி முழுவதும் தமிழ்நாடு மின்வாரிய பணியாளர்களுடையதாகும். புதிய மின்கம்பங்கள், மின் மாற்றிகள் அமைப்பது உட்பட புதிய மின் இணைப்புகளைத் தருவது போன்றவை இதுவரை

தமிழ்நாடு மின்வாரியத்தர்ல் முடிவு செய்யப் பெற்று வந்தன. பஞ்சாயத்து இராசிய அமைப்புகள் தோன்றிய பின்னர் கிராமங்களில் மின் மாற்றிகளையும் மின் கம்பங்களையும் நிறுவுவதற்கான புதிய அமைவிடங்களைக் கண்டறிவதற்கான உதவியையும் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து தமிழ்நாடு மின்வாரியம் பெற இயலும் நிலையிலுள்ளது. சூழ்நிலையானது மின்வாரியமும், ஊராட்சிகளும் ஒன்றுக்கொன்று பலனடையதக்க வகையிலும், அவற்றிற்கிடையே ஆக்கப் பணித் தொடர்புகளுக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள இடமளிக்கிறது. தமிழ்நாடு மின்வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட அனைத்து பொருளாதார வளர்ச்சி, நலத் திட்டங்கள் ஆகியவற்றை விழிப்புடன் கண்காணிப்பதற்குரிய சீராய்வு அதிகாரங்களை ஊராட்சி ஒன்றியங்கள் பெற்றிருக்க வேண்டும். மேலும் மாவட்ட நிலையில் மின் ஆற்றல் குறித்துத் திட்டமிடுதலில் அரசு, தமிழ்நாடு மின்வாரியம் ஆகிய இரண்டிற்கும் மாவட்ட ஊராட்சியானது அறிவுரை கூறும்.

**04.** மேலே குறிப்பிட்ட பின்புலங்களின் அடிப்படையில் பின்வரும் செய்கடமைகள் ஊரக உள்ளமைப்பு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட வேணடுமெனப் பரிந்துரைக்கப்பெறுகிறது.

## I. ஊராட்சி

| தொடர் எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | தெருவிளக்குகளை இயக்குதலும் பராமரித்தலும் | 1. தெரு விளக்குகளை பராமரிப்பதற்கான உபகரணங்களை (பல்புகள் / ட்யூபுகள்) கொள்முதல் செய்து விநியோகித்து தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பணியை மேற்கொள்ளுதல். |
| 2. | மின்னாற்றல் வழங்கப்படுதலைக் கண்காணித்தல் | 1) முதன்மைப் பயிர் பருவகாலத்தில் மின் ஆற்றல் வழங்குதலைக் குறித்து அறிக்கை அளித்தல். |

## II. ஊராட்சி ஒன்றியம்

| தொடர் எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | மின்னாற்றல் வழங்கப்படுதலைச் சீராய்வு செய்தலும் கண்காணித்தலும் | 1) ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் வேளாண்மைக்காக மின்சக்தி வழங்குதல், நீரிறைக்கும் விசையேற்றிகளுக்கு மின்ஊட்டுதல் – ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்புத் தருதல், குடிசைகளுக்கு மின் இணைப்பு தருதல் போன்ற தமிழ்நாடு மின் வாரியத்தாலும் அரசாலும் நிறைவேறறப்படுகின்ற அனைத்துத் திட்டங்களையும் கண்காணித்தலும், சீராய்வு செய்தலும். |

## III. மாவட்ட ஊராட்சி

| தொடர் எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | மின்சக்தியை கண்காணித்தலும் சீராய்வு செய்தலும் | i) அரசின் திட்டங்கள் அனைத்தையும் சீராய்வு செய்தல்; குறிப்பாகநீரிறைக்கும் விசையேற்றிகளுக்கு மின்ஊட்டல் (எண்ணிக்கையிலும் தரத்திலும்) குடிசை மின்னிணைப்பு திட்டம் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளித்தல் ஆகியவற்றுடன் மாவட்டத்தில் மக்கள் நலனுக்காகவும் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் தமிழ்நாடு மின்வாரியத்தால் செயற் படுத்தப்பட்ட எந்த ஒரு திட்டம் குறித்தும் செய்த பணிகளை கண்காணிப்பு (மேற் பார்வை) பொறியாளர்கள் மேற் கொள்வதுடன் மாவட்ட ஊராட்சிகளுக்கு உத்தரவாதமுள்ளவர்களாக இருக்க வேண்டும். |

**சிக்கல்கள்**

06. தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பணியில் உரிய நேரத்தில் தெரு விளக்குகளுக்கு மாற்று விளக்குகளைப் பொருத்துவதற்குத் தேவைப்படும் மின் பணியாளர் (கம்பியாளர்) கிடைக்காதிருபபதே பெருங்குறையாகும். ஊராட்சி ஒன்றியத்துடனும் ஊராட்சியுடனும் இப்போது பராமரிப்புப் பணியினை தமிழ்நாடு மின்வாரியம் மேற்கொண்டுள்ளது. எனினும், மாற்றி வைப்பதறகான மின் சாதனங்கள் ஊராட்சிகளால் வழங்கப்பெறுகின்றன.

07. எல்லா பகுதிகளுக்கும் மின்னொளி வழங்குவதும், எல்லா குமிழ் விளக்குகளையும் நான்கடி குழல் விளக்குகளாக மாற்றி அமைப்பதும் அரசின் கொள்கையாகும். மின்சட்டத்தின்படி தெருவிளக்குகளை இயக்குவது பராமரிப்பது ஆகிய பணிகள் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பெற்றுள்ளன. (அ) தெருவிளக்குகளுக்கான மின் பயனீட்டளவு கட்டணங்கள் (ஆ) நீர் வழங்குதலுக்கான மின் பயனீட்டளவு கட்டணங்கள் (இ) தெருவிளக்குகளைப் பராமரித்தல் ஆகிய மூன்றுக்குமான செலவினங்களை சிற்றூராட்சிகள் ஏற்க வேண்டும். ஊராட்சிகள் அரசு ஆகிய இரண்டுமே பொறுப்பை ஏற்க வேண்டும்.